கம்பராமாயணம் பற்றி ஆற்றிய உரைகளால் அனைவரின் மனங்களையும் கவர்ந்தவர். தமிழில் இவருக்கிருந்த புலமையால் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு 'கலைமாமணி', 'பத்மஸ்ரீ' என விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(iv) திரு. மனோகர் தேவதாஸ், பிரபல ஓவியர் மற்றும் எழுத்தாளர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரபல ஓவியரும் எழுத்தாளருமான திரு. மனோகர் தேவதாஸ் அவர்கள் 7-12-2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மரபுக் கட்டடங்களை ஓவியமாக வரைவதில் மிகுந்த ஆர்வம் கொண்ட திரு. மனோகர் தேவதாஸ் அவர்கள், சிறு வயதிலேயே விழித்திரை நோயால் பார்வைத் திறன் பாதிக்கப்பட்டு வந்த நிலையிலும் ஊக்கம் சற்றும் குறையாமல், மதுரை மண்ணின் அடையாளங்களை அழகாகத் தீட்டி கலை, எழுத்து, சமூகப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு அனைவராலும் பாராட்டப்பெற்றதோடு, 'பத்மஸ்ரீ' விருது பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர், கலைத் துறை நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(v) மருத்துவர் D. மஸ்தான், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் துணைத் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறுபான்மையினர் நலன் மட்டுமின்றி, அனைத்து சமுதாய மக்களின் நலனிற்காகவும் முன்னின்று செயலாற்றிய மருத்துவர் D. மஸ்தான் அவர்கள் 22-12-2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

2023 ஜனவரி 10] [பேரவைத் தலைவர்]

1995-2001 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும், 2021 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் துணைத் தலைவராகவும் மருத்துவர் D. மஸ்தான் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

(vi) திரு. பீலே, பிரபல கால்பந்து விளையாட்டு வீரர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கால்பந்து விளையாட்டு நட்சத்திர வீரர் திரு. பீலே அவர்கள் 29-12-2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

'Black Pearl' *என்று பாராட்டப்பெற்று கால்பந்து விளையாட்டில் முத்திரைப் பதித்த திரு. பீலே அவர்கள் உலகக் கோப்பையை வென்று கொடுத்த பெருமையுடையவர். இவர், கால்பந்து விளையாட்டின் அரசராகத் திகழ்ந்து, பல கோடி பேரை ஈர்த்தவர்.*

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், கால்பந்து விளையாட்டு வீரர்களுக்கும், இரசிகர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)